# தேர்தல் அறிக்கை



கன்னியாகுமரி மக்களவைத்தொகுதி

மக்கள்வேட்பாளர்

திரு. வில்சன் அவர்களுக்கு,

தேர்தல் சின்னமாகிய



## பேட்டரி டார்ச்

சின்னத்தில் வாக்களித்து தேர்ந்தெடுக்கவும்:

| | | |
|---|---|---|
| வயது | : | 44 |
| முகவரி | : | வீட்டு எண்: 3/51-A-1<br>அயக்கோட்டுவிளை வீடு,<br>செம்மண்காலா,<br>புத்தன்சந்தை,<br>இடைக்கோடு அஞ்சல்,<br>கன்னியாகுமரி மாவட்டம். |
| கல்வித்தகுதி | : | மேல் நிலைக்கல்வி |
| தொழில் | : | ஓவியர் |

**முன்மொழிந்தவர்கள்:**

புத்தன்சந்தை, செம்மங்காலை, கடையாலுமூடு, குஞ்சாலுவிளை, பாலுக்குழி, முக்கூட்டுக்கல், இடைக்கோடு, அருமனை, வெள்ளாங்கோடு, மஞ்சாலுமூடு, மற்றும் விளவங்கோடு தாலுகாவிலுள்ள பல்வேறு பேரூராட்சிகள், ஊராட்சிகளில் செயல்படுகின்ற மக்கள் குழுக்கள்.

# தேர்தல் அறிக்கை

கன்னியாகுமரி மக்களவைத் தொகுதி பிரதிநிதியாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டால் தொகுதி வாக்காளர்களின் பேராதரவுடன் கீழ்கண்ட அம்சங்களை முன் வைத்து போராடுவேன்.

1. மக்களவைத் தொகுதி மேம்பாட்டு நிதியை, மக்களின் கோரிக்கைகளை அடிப்படையாக வைத்து பயன்படுத்துவேன். மேலும் தொகுதி மேம்பாட்டு நிதியையும், செலவுகளையும், மக்கள் அமைப்புகள், மற்றும் வெகுஜன அமைப்புகளின் மேற்பார்வைக்கு உட்படுத்துவேன்.

2. ஒவ்வொரு குடியிருப்பு பகுதிகளிலும், பணியிடங்களிலும் கட்சி சார்பில்லாத மக்களாட்சிக் குழுக்களை அமைத்து, தேர்நதெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடைய சேவைவிபரம் மற்றும் வருவாய் கணக்கு விபரங்களை மக்கள் கேட்கவும் பிரதிநிதிகள் மக்கள் குழுக்களின் முடிவுக்கு கட்டுப்பட்டு செயல்படுவதற்குப்பாடுபடுவேன்.

3. கடற்கரை மேலாண்மைத்திட்டம் என்ற பெரால் கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்கள் மற்றும் பிற உழைக்கும் மக்களின்குடியிருப்புகளை "அங்கீகாரமற்ற குடியிருப்புகள்" என்று அறிவித்து வாழ்விடங்களில் இருந்து மக்களைவிரட்டுகின்ற மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்து போராடுவேன்.

4. மக்களிடமிருந்து பெறப்படும் வரிவசூல் நிதியை பெரும் முதலாளிகளுடைய நிறுவனங்களுக்கு மத்திய அரசு வாரிவழங்குவதற்கெதிராகவும், வரிவசூல் நிதியை மத்திய அரசாங்கம் உழைக்கும் மக்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தார்களின் வாழ்க்கை நலன்களுக்காக மட்டுமே செலவுசெய்ய வேண்டும் என்பதை வலியுறுத்திப் போராடுவேன்.

5. கன்னியாகுமரி மக்களவைத் தொகுதியில் வீட்டுமனை ஒப்படைப்பு பட்டா கோரி பலவருடங்களாக போராடிவருகின்ற பொது மக்களின் கோரிக்கையை வலியுறுத்தி வீட்டுமனை ஒப்படைப்பு பட்டா வழங்கவும், வருவாய் துறைவிதிகளை தளர்த்தவும் பாடுபடுவேன்.

6. வீடில்லாத எல்லோருக்கும் வீட்டுவசதியை உருவாக்க கோரியும் வீடுபெறும் உரிமையை அடிப்படை உரிமையாக்க கோரியும் வலியுறுத்துவேன்.

7. வேளாண்மை விளை நிலங்களை விவசாயிகளிடமிருந்து கட்டாயப்படுத்தி மிகக் குறைந்த விலையில் வாங்குவதையும் குறைந்த விலைக்கு வாங்கப்பட்ட நிலங்களை பெரும் முதலாளித்துவ நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதையும் உடனடியாகக் கைவிடக்கோருவேன்.

8. தலைச்சுமை வியாபாரிகள், தெரு தெருவாகச் சென்று பொருட்களை விற்பவர்கள், சிறுகடைக் காரர்கள், ரிக்'ா, ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள உழைப்பாளி மக்கள் மீது காவல்துறையினர் பதிவு செய்யும் பொய்வழக்குகள் மற்றும் அச்சுறுத்தல்கள், போன்றவற்றுக்கு முடிவுகாணப் போராடுவதோடு உழைப்பாளிமக்கள் தங்களுடைய தொழில்களைச் செய்ய தகுந்த இடம் வழங்க வேண்டும் என்றும் அரசை வலியுறுத்துவேன்.

9. பெண்களுக்கெதிராக நடைபெறுகின்ற குடும்பவன் முறைச்சம்பவங்கள் மற்றும் காவல் துறையினரின்

அச்சுறுத்தல்கள், வீதிகளிலும், வேலை செய்யும் இடங்களிலும் பெண்கள் மீது நடத்தப் படுகின்ற எல்லாவிதமான அத்து மீறல்களையும் முடிவுக் கொண்டுவர நடவடிக்கை எடுப்பேன்.

10. சாதி, மதம் அல்லது பிராந்தியவெறி போன்றவற்றை அடிப்படையாக வைத்து சமுதாயத்திற்கு எதிரான வகுப்புவாதக் கலவரங்கள், பயங்கரவாதத்தாக்குதல்கள் போன்றவற்றை திட்டமிட்டு உருவாக்கி செயல்பட்ட குற்றவாளிகள் எல்லோரும் அவர்கள் யாராக இருந்தாலும் தண்டனைக்கு உட்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

11. நியாயமான விலையில், போதுமான அளவில் நல்லதரத்துடன் உணவுதானியங்களும், மற்றும் சமையலுக்குத் தேவையான பிற பொருட்களும் நவீன மயமாக்கப்பட்ட பொதுவிநியோகத்திட்டத்தின் மூலம் வழங்கும்படி போராடுவேன். மொத்த வியாபாரம், அத்தியாவசியப் பொருட்களின் சேமிப்பு விபரம் போன்றவற்றை அரசு ஏஜென்ஸிஸ் மூலமாக மக்கள் குழுக்களினால் கட்டுப்படுத்திடவும், கண்காணிப்புக்கும் போராடுவேன். பொதுவிநியோகத்திட்டத்தால் தனியார் லாபம் பெறுவதை நீக்கவும், அத்தியாவசிய பொருட்கள் வியாபாரத்தில் ஊக வாணிபத்தை வருங்காலங்களில் தடைசெய்யக் கோரியும் போராடுவேன்.

12. மக்கள் வாழ்விடப்பகுதிகளில் தேவையான ஒவ்வொரு பகுதிகளிலும், பொதுக் கல்வி நிலையங்கள் அமைக்கப் பெற்று தரமான கல்விவழங்க உத்திரவாதமளிக்கப்படும். மற்றும் கல்வி நிலையங்களில் நவீனமான உள்கட்டமைப்பும், பிறவசதிகளும் ஏற்படுத்தப்படும். தொழிலாளர்கள் - விவசாயிகள் வீட்டுமாணவர்களுக்கு கட்டுப்படியாகும் செலவுத்திட்டத்தின் கீழ் நல்லதரமான மேல் நிலைக்கல்வி கிடைக்கவும் உத்திரவாதம் அளிக்கவும் பாடுபடுவேன்.

13. அனைவருக்கும் கல்வி, மருத்துவம் மற்றும் வேலைவாய்ப்புகள் வழங்கவும்

விளையாட்டுமையம், கலை, கலாச்சார பொழுது போக்கு மையங்களை இளைஞர்களுக்காக உருவாக்கவும்,

ஒவ்வொரு சமுதாயத்தினருடைய கலாச்சாரம் மற்றும் மொழிவளர்ச்சிக்காகவும்,

பெண்கள் பணிபுரியுமிடங்களில் குழந்தைகள் காப்பக வசதிகள் வழங்கவும் விதிவிலக்கின்றி உழைக்கும் மக்கள் அனைவருக்கும் தங்களுடைய வாழ்க்கைச் செலவுகளுக்கு ஏற்றார்போல் குறைந்தபட்ச ஊதியத்தை உடனடியாக மாற்றியமைத்து அமுல் படுத்த அரசு உத்திரவாதமளிக்கவும்,

அமைப்புசாராத் துறை தொழிலாளர்களுக்கு ஒருங்கிணைந்த சட்டம் நிறைவேற்றக்கோரியும்.

வீட்டு வேலை செய்பவர்களுக்கு சட்டப்படியான பாதுகாப்பும், உரிமைகளுக்காகவும்,

மேற்கண்ட திட்டங்களுக்குரிய நிதியை பெரிய நிதி நிறுவனங்களிடமிருந்து நீண்ட காலத்திட்டத்தின் கீழ் திருப்பிச் செலுத்துவதற்கான விதிமுறையின் கீழ் பெறவும், கறுப்புபணத்தை வெளிக் கொண்டுவரவும், உள்நாட்டு மொத்த வியாபாரம் மற்றும் வெளிநாட்டுவியாபாரங்களில் சமூக கட்டுப்பாடு, மூலமாக கண்காணிக்கவும் உள்நாட்டு பாதுகாப்புச் செலவுகள் மற்றும் பாதுகாப்புத்துறைக்கு அதகளவில் நிதி ஒதுக்கப்படுதல் போன்ற செலவுகளை குறைக்கவும், வலியுறுத்திப் போராடுவேன்.

## மக்களுக்காக நான் செய்த சேவைகள் என்ன?

நான் என்னுடைய 22ம் வயது முதல் கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு, திருவட்டார் தொகுதிகளில் வாழும் ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள், கட்டிடத்தொழிலாளர்கள், சுமைதூக்கும் தொழிலாளர்கள் மற்றும் பிற அமைப்புசாராத் தொழிலாளர்களோடு இணைந்து பலபோராட்டங்களில் பங்கெடுத்துள்ளேன். தொழில் தாவாக்கள் ஏற்பட்ட சமயத்தில்

தொழிலாளர் துறை அதிகாரிகள் முன்னிலையில் பேசி உடன்படிக்கை ஏற்படவும் பாடுபட்டுள்ளேன். உடன்படிக்கையை முதலாளிகள் தரப்பு மீறிய போது தொழிலாளர்துறை நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து தொழிலாளர்களின் உரிமைக்காக நடவடிக்கை எடுத்துள்ளேன்.

மனித உரிமை மீறல்கள், மத்திய மாநில அரசின் மக்கள் விரோதக்கொள்கைகள் போன்றவற்றைக்கெதிராக பாதிக்கப்பட்ட மக்களோடு ஒன்றுபட்டு போராடியிருக்கிறேன்.

தனியார் ரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் கூலி உயர்வுக்காக போராட்டம் நடத்திட சிறைக்கு சென்றிருக்கிறேன். சுனாமி ஏற்பட்ட போது கன்னியாகுமரி மாவட்டக்கடலோர மக்களின் மறுவாழ்வுக்காகவும் நிவாரணம் வழங்க அரசாங்கத்திடம் வாதாடியிருக்கிறேன். பெண்கள் விடுதலைக்காகவும், அரசியல் படுகொலைகளுக்கெதிராகவும், தமிழக காவல் துறை மக்களின் அரசியல் உரிமைகளைப் பறிப்பதற்கெதிராகவும், நடவடிக்கை எடுத்துள்ளேன்.

வேலை இல்லாத்திண்டாட்டம், விலைவாசி உயர்வுக் கெதிராகவும் தொடர்ந்து போராடி வருகிறேன். அரசு பயங்கரவாதத்திற் கெதிராகவும், எதிர்மோதல் என்ற பெயரால் காவல்துறையினர் நடத்துகின்ற படுகொலைகள் துப்பாக்கிச் சூடுகளையும் கண்டித்து மனித உரிமை ஆணையம்வரை புகார் அனுப்பியுள்ளேன்.

தெற்காசிய நாடுகளில் ஒன்றான இலங்கையில் அமைதி ஏற்படவும், இந்தியா அமெரிக்காவின் இராணுவக்கூட்டு நடவடிக்கைகளுக்கெதிராகவும் மக்களிடம் துண்டுப்பிர சுரம்விநியோகித்து வேலை செய்துள்ளேன்.

## எனது குறிக்கோள்கள்

- அனைத்துவகையான சுரண்டலுக்கும், பயங்கரவாதச் செயல்கள், ஒடுக்குமுறைகளுக்கும் முடிவு கட்டுவது, மற்றும் மக்களைப்பிளவு படுத்தியும், அரசியலில் மக்களின் பங்களிப்பை கட்டுப்படுத்துகின்ற வாக்குவங்கி அரசியலை முடிவுக்கு கொண்டுவருவது.

❖ சமுதாயத்தின் முக்கிய பிரச்சினைகள் எல்லாவற்றிலும் மக்களே முடிவுகளை எடுப்பதற்கும், மக்களே ஆட்சியாளர்களாக முன்வருவதற்கும் அரசியல் வழிமுறையைப் புதுப்பிக்க போராடுவதுடன், நடப்பிலுள்ள ஜனநாயக விதிமுறைகளை மாற்றி, புதிய ஜனநாயக விதி முறைகள் மற்றும் புதிய அரசியல் வழி முறைகளை உருவாக்குதல், தேர்தலில் போட்டியிட விரும்பும் எந்த வேட்பாளரும், அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் தொகுதி மக்களுக்கு கட்சி சார்பற்ற முறையில், மக்களாட்சி குழுக்கள் மூலம் பதிலளிக்க கடமைப்பட்வர் என்ற விழிப்புணர்வை உருவாக்குவது, மக்களாட்சி குழு போன்ற பல்வேறு அமைப்புக்களை மக்கள் அதிகார அமைப்புக்களாக முன்னிலைக்கு கொண்டு வருவது மக்களே சட்டங்களை முன்மொழியவும், தகுதியில்லாத பிரதிநிதிகளை எந்த நேரத்திலும் திருப்பி அழைக்கும் உரிமைக்காக போராடுவது.

❖ எல்லா மக்களுடைய பாதுகாப்புக்கும், வளமைக்கும் உத்திரவாதமளித்திட உழைக்கும் மக்களை ஒன்றிணைப்பதுடன், உழைக்கும் மக்களின் தலைமையில் நடப்பிலுள்ள சுரண்டல் அமைப்பு முறையை மாற்றுவது.

❖ அரசியல், பொருளாதாரத்துறைகளில் மேற்கத்திய மாதிரி திட்டங்களுக்கு உட்பட்டிருக்கிற இந்தியர்களின் தாழ்வு மனநிலைக்கு முடிவு கட்டுதல், இந்தியர்களின் அறிவுகளையும், ஆற்றல்களையும் கற்பது, உலகத்திலுள்ள அனைத்து மக்களுடைய ஆற்றல்களையும், அனுபவத்தையும் கற்றுக்கொள்வது மற்றும் இந்திய சமுதாயத்தை அடித்தளமாக வைத்து இந்தியர்களின் சிந்தனைகளை மேம்படுத்துவதற்காக பாடுபடுவது எனது குறிக்கோள்களாகும்.

நான் உங்களில் ஒருவன், தொகுதியிலுள்ள பெரும் பாண்மையான மக்களின் விருப்பங்களே, எனது விருப்பம்.

கன்னியாகுமரி மக்களவைத் தொகுதி மக்களின் கனவுகளை நிறைவு செய்ய ஒன்றுபடுவோம்!

கன்னியாகுமரி மக்களவைத் தொகுதியின் "மக்கள் வேட்பாளர்" திரு. **வில்சன்** அவர்களுக்கு



## பேட்டரி டார்ச்

சின்னத்தில் வாக்களித்து தேர்ந்தெடுப்பீர்.

என்னுடைய தேர்தல் பிரச்சார இயக்கத்தை ஆதரிப்பவர்கள்,

இந்திய கம்யூனிஸ்ட்கெதர் கட்சி

மக்களாட்சி இயக்கம்

இந்திய இளைஞர் ஒற்றுமைக்குழு

முற்போக்குமாதர் சங்கம்

தோழிலாளர் ஒற்றுமைக்குழு,

கட்டிடத் தொழிலாளர் பஞ்சாயத்து சங்கம., மற்றும் தமிழக விவசாயிகள் சங்கம் கன்னியாகுமரி மாவட்டம், அமைப்புசாரா தொழிலாளர் கூட்டமைப்பு தமிழ்நாடு, மக்கள் இயக்கங்களின் தேசிய கூட்டமைப்பு மதுரை.ஜனநாயக மீனவர் சங்கம்,குமரி மாவட்டம்.

**தொடர்புக்கு:** தேர்தல் பிரச்சார இயக்க ஒருங்கிணைப்பாளர்,

பொ. ஆப்ரகாம், 9487422519, சு. சரவணன், 9486607248